3. மண்ணகம் வந்த (காணிக்கைப்பாடல்)

பாடல்: Dr.சேவியர்
இசை: என்சோன்
பாடியவர்: டெய்சி என்சோன்
கோரஸ்: ரெய்ச்சல் ரோஸ், செசிலியா என்சோன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

மண்ணகம் வந்த மாணிக்கமே
ஏற்பீர் எந்தன் காணிக்கையே
உம்மிடம் பெற்ற வரங்களையே
அளித்தோம் உந்தன் கரங்களிலே
விண்ணும் மண்ணும் படைத்தவரே
உந்தன் அன்பு வானாகும் !
மண்ணிலே வந்த மனுமகனே
எதைநான் தந்தால் ஈடாகும் ?

1. அகம் தனைப் பார்த்து ஆபேல் தந்த
காணிக்கை ஏற்றீர் இறைமகனே
மனம் தனைப் பார்த்து விதவையின் காசை
அன்புடன் ஏற்றீர் ஆண்டவரே
எளியவர் நாங்கள் தருகின்ற எங்கள்
காணிக்கை ஏற்பீர் மனுமகனே தி
ருவடி தனிலே இதயம் தன்னைக்
காணிக்கை தந்தோம் விண்ணவனே

2. பகையினை மனதில் நிறைக்கின்ற மனிதர்
தருகின்ற காணிக்கை ஏற்பதில்லை
உறவுகள் இடையில் பிரிவுகள் இருந்தால்
படைக்கின்ற காணிக்கை பயனுமில்லை
உயிரெனும் மகனை பலியிட வந்த
ஆபிரகாம் போல் எவருமில்லை
முழுமையும் இறையின் கரங்களில் இன்றே
காணிக்கை தந்தால் அழிவதில்லை